# கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் - அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி

0ll

## முதல்வர் அவர்களின் செயல்முறைகள்
## முன்னிலை: முனைவர் வே.சண்முகம் எம்.ஏ., எம்.பில்., பி.எச்.டி.

**ந.க.எண்:** 281/அ/2021 **நாள்:** 02.12.2021

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி - ரிஷிவந்தியம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதி IV இளநிலை உதவியாளர் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டது - இளநிலை உதவியாளர் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக

பார்வை: 1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் செயலர் அவர்களின் கடித ந.க.எண்: 2361/PSD-1/2020 நாள்: 29.05.2020
2. சென்னை - 06 கல்லூரிக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்: 16252/பி1/2020 நாள்: 27.08.2020
3. ரிஷிவந்தியம் - அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்: 33/அ/2020 நாள்:10.09.2020
4. சென்னை - 06 கல்லூரிக்கல்வி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்:16252/பி1/2020 நாள்:07.09.2021

பார்வை 1ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்களின் பட்டியலின் படி பார்வை 2ல் காணும் கல்லூரிக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளில் இவ்வலுவலகத்தில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 3ல் காணும் இக்கல்லூரி முதல்வரின் செயல்முறைகளின் படி பணிநியமன ஆணை வழங்கப்பட்டு இவ்வலுவலகத்தில் பணியில் சேர்ந்தார்.

| வ. எண் | பெயர் / பதவி | அலுவலகம் | பிறந்த தேதி | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|---|
| 1. | திருமதி ச.மல்லிகா, இளநிலை உதவியாளர் | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ரிஷிவந்தியம். | 02.06.1981 | 10.09.2020 |

பார்வை 4ல் காணும் சென்னை - 06 கல்லூரிக்கல்வி இயக்குநர் அவர்கள் கடிதத்தில் தெரிவித்ததின் படி அன்னார் பணியில் சேர்ந்த நாள் 10.09.2020 முற்பகல் முதல் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

"இப்பணிவரன்முறை தொகுதி IV 2018 - 2019 மற்றும் 2019 - 2020 பணிநியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் உள்ள வழக்குகளில் வழங்கப்பட உள்ள இறுதித் தீர்ப்பாணைக்குட்பட்டது."

அன்னார் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு தொடர்ச்சியான பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவ காலத்தில் வைக்கப்படுவார் என்றும் இக்காலகட்டத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

02/12/2021

முதல்வர்

முதல்வர்
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
ரிஷிவந்தியம் - 606 205.
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

பெறுநர்:

திருமதி ச.மல்லிகா, இளநிலை உதவியாளர்.

நகல்:

1. கல்லூரிக்கல்வி இயக்குநர் ,
   கல்லூரிக்கல்வி இயக்குநர் அலுவலகம், சென்னை - 06.
2. மண்டல கல்லூரிக்கல்வி இணை இயக்குநர்,
   வேலூர் மண்டலம், வேலூர் - 06.